புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது

உ
சிவமயம்

விரோதிஹு (1889 ஆவணிமீ ௨௮௳ ஆரம்பமானது)

# இந்துசாதனம்

(Supplement to the Hindu Organ)

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

பத்திராக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம் | ரூ | 5 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 9 00 |
| இலங்கை இந்தியா | ரூ | 8 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 12 00 |
| தொடுவாய்ப்பகுதி | ரூ | 9 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 13 00 |
| தனிப்பிரதி | சதம் | 05 |

முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே."

—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு

| | | |
|---|---|---|
| " | ஒரு கலம் | ரூ. 10 00 |
| " | அரைக் கலம் | ரூ. 5 50 |
| " | கால் கலம் | ரூ. 4 00 |
| " | ஒரு அங்குலம் | ரூ. 1 00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி.

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—௪௯ | யாழ்ப்பாணம்:— ஈசுவரஹு வைகாசிமீ ௧௧௳ (1937 மே 24) திங்கட்கிழமை | இலக்கம்—௧௧

## கல்விச் சட்டத் திருத்த யோசனை

### எங்கே! ஓ! கிறீஸ்துவ தருமமெங்கே?

(ஸ்ரீமான். சு. இராசரத்தினம் அவர்கள் எழுதியது)

கிறீஸ்துவ மிசனெறிமார் தாம் இலங்கையில் முதற் கல்வி விருத்தி செய்தோமென வாதாடுவர்; இப்போதைய இலங்கையை இலங்கையாக்கி வைத்தவர் தாமாம்; முக்கியமாகச் சமூக முன்னேற்றத்துக்கும் சமயத் தேவைக்கும் தாம் உழைக்கின்றனராம். அவர் உழைப்பெல்லாம் கேவலம் சுத்தக் கிறீஸ்தவ தருமத்திலிருந் தூற்றெடுக்கின்றது. ஆதலின், இப்போது யோசனையிலிருக்கும் கல்விச் சட்டத் திருத்தத்தைக் கண்டு பீதியடைகின்றனர். "மானேஜ்மெண்ட் மதத்தைச் சேர்ந்த பிள்ளைகளாய்" என்ற சொற்களைச் சேர்த்தலே இப்போது யோசிக்கப்படும் திருத்தம். அவர், விசேடமாக வடபாகக் கிறீஸ்தவர், மறுக்கின்றனர், கண்டிக்கின்றனர். நன்றி கெட்ட புத்த ராசாங்கம், சிறுபான்மைக் கட்சியினராகிய தம்மை, தேச ராசாங்கத்திடமிருந்து கல்வி விதைப்பையெல்லாம் தனிக்குத்தகை வாங்கியிருந்த தம்மை, விழுத்துவதற்கு இலக்கு வைக்கிறதாம்

சரித்திரம் என்ன சொல்லுகிறது? ஈவிரக்க மில்லாத போத்துக்கேயரின் வெட்டுக் கொட்டுகளினாலும், ஒல்லாந்தரின் நசுக்கு முயற்சிகளாலும் அழிந்தொழிந்த சிங்கள காவிய பாடசாலைகள், தமிழ்க் காவிய பாடசாலைகள் போகட்டும். நூற்றுக் கணக்கான சிங்கள பிரதம பாடசாலைகள், தமிழ்ப் பிரதமபாடசாலைகள் போகட்டும். 300 வருடம் இழுத்து நிகழ்ந்த வதைப்புகளும் அரசியல் உழக்குதல்களும், கல்வி நசுக்குதல்களும் வேலை முடித்தது போகட்டும். 1834 ல், சமய சமநோக்கு வசிக்கும் பிரித்தானியர் வந்து பல வருடங்களுக்குப் பின், மேல் மாகாணத்தில் புத்த பாடசாலைகள் 453; கிறீஸ்துவ பாடசாலைகள் 112; வடமாகாணத்திற் சைவப் பாடசாலைகள் 239; கிறீஸ்துவ பாடசாலைகள் 184.

ஆனால் 1871 ல் என்னகிலே? புத்த பாடசாலைகள், சைவப் பாடசாலைகள் பூச்சியத்தின் எல்லைக்குச் சுருங்கி விட்டன? சமய சமநோக்கு வசிக்கும் பிரித்தானியர் காலத்திலல்லவா சுருங்கி விட்டன! இவை சுருங்கிக் கிறீஸ்துவ பாடசாலைகள் பெருக யார் என்ன செய்தார்கள்? சரித்திரம் என்ன சொல்லுகிறது? 1861 வரை புறட்டெஸ்தாந்தரே இராசாங்கப் பண உதவி பெற்ற கல்வி விருத்திக்காராம். அவரே இராசாங்கப் போஷணை பெற்றவராம். ரோமன் கத்தோலிக்கருக்கு இந்தப் போஷணையும் பண உதவியும் 1861 ல் இருந்து கிடைத்தனவாம். 1871 ல் இருந்தே தம் பிள்ளைகளைப் படிப்பித்தற்குக் கிறீஸ்துவ ரல்லாதாருக்கித் உதவி கிடைத்ததாம்; அது கொடுத்தற்கும் பெரிய அருக்காணியாம். அனாவிறந்த கிறீஸ்துவ [illegible]

கத்தின் கீழ் இருந்த அக்கால ராசாங்கம், கிறீஸ்துவரல்லாதார் எவருக்கேனும் இருக்கும் ஆரம்ப சக்தியை அமுக்கத்தக்க விதமாகக் கல்விச் சட்டங்களை ஆக்கி வைக்குந்தானே 1861 வரையிலேதான் உதவிநன்கொடை பெறுதற்குரிய நிபந்தனையிலே பின்வரும் வாக்கியம் காணப்பட்டது:—

"ஒரு பாடசாலைக்கருகாமையிலிருக்கும் அதே வகுப்பைச் சேர்ந்த பாடசாலைக்கேனும் பாடசாலைகளுக்கேனும் நன்கொடை வழங்கப்படமாட்டாது"

அக்காலக் கல்விச் சட்டம் "சகல கிறீஸ்துவக் கட்சிகளாலும் ஏற்கப்பட்ட உண்மைகளை — தினமும் பைபிளை வாசித்தலும், அப்போஸ்தலரின் கொள்கைகள், பத்துக் கற்பனை, ஆண்டவன் செபம் என்பவைகள் சம்பந்தமான பாடங்களுமே—சமய பாடமாகும் என்று விதித்திருந்தது!

"ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையின் அருகாமையில்" என்னும் தொடர்கள் வரையறுக்கப்படாது சிலகாலம் கிடந்தபின் "ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைக்கு 2 மைல் தூரத்துக்குள்" என்று வரையறுக்கப் பட்டது. இவ்விதி 1922 வரை அனுசரணையில் இருந்து வந்தது. 1922 க்குச் சிறிது முன்பு ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைக்காரர் மதத்துக்குச் சேராத மானேஜ்மெண்ட், பக்கத்தில் பாடசாலைகட்டி 3 தொடக்கம் 5 வருடம்வரை 60க்கு மேற்பட்ட சராசரி காட்டி நன்கொடை பெறத்தக்க பிரமாணங்கள் ஏற்பட்டன. புதிய மானேஜ்மெண்ட் புதிய பாடசாலை கட்டுவதற்கிட்ட நிபந்தனைகள் இவ்வாறிருக்க ஸ்தாபிக்கப் பட்ட பாடசாலைக்குச் சேர்ந்த மனேஜ்மெண்ட் — விசேடமாகக் கிறீஸ்துவ மனேஜ்மெண்ட் - இரண்டு மைல் எல்லைக்குட் 15 சராசரியுடன் பாடசாலை தொடங்கக் கூடியதாக இருந்தது. பிரித்தானிய சமநோக்கின் அழகல்லவா அழகு? கிறீஸ்துவரல்லாதாரிடையிற் கிறீஸ்துவ பாடசாலைகள் நூற்றுக் கணக்காக முளைத்ததில் ஆச்சரியமென்ன?

இந்த 2 மைல் எல்லை 1922 ல் ஒரு மைல் ஆக்கப்பட்டாலும் ஸ்தாபிக்கப்பட்ட கிறீஸ்துவ பாடசாலையொன்றிலிருந்து கால் மைல் எல்லைக்குட் கிறீஸ்துவரல்லாத எவரும் தம் மதப் பிள்ளைகளைப் படிப்பித்தற்குப் பாடசாலை தொடங்க முடியாத நிலை 1926 வரை இருந்து வந்தது. இப்போதும் கிறீஸ்துவரல்லாதவர் எவரும் ஸ்தாபிக்கப்பட்ட கிறீஸ்துவ பாடசாலையிலிருந்து ஒரு மைலுக்குட் பாடசாலை தொடங்கினால் நன்கொடை பெறுதற்கு என்ன வேண்டும்? முக்கிய வருடத்தில் 30 க்குக் குறையாத சராசரி வேண்டும். அடுத்த [illegible]க் கிறீஸ்துவ பாடசாலையில், அக் கிராமத்திலுள்ள ஒரே ஒரு பாடசாலையில் உள்ள சராசரி 15. கிறீஸ்துவப் பிள்ளை யொன்றேனுமில்லை. ஆயினும், புதிதாகப் பாடசாலை தொடங்குபவர் 30 சராசரி சிருட்டிக்க வேண்டும். இலேசான வேலைதானே! இது தான் பிரித்தானிய சமய சமநோக்கு. இதுதான் சைவரும் புத்தரும் முன்னர்ச் செய்த யத்தனங்களைக் கொன்றுதொலைத்த சமநோக்கு. இது தீர்க்காயுளோடு வாழ வேண்டும் என்று நமது வடபாகக் கிறீஸ்தவர் வாதாடும் சமநோக்கு.

கிறீஸ்துவர் தம் பிள்ளைகள் கிறீஸ்துவ பாடசாலையிற் படிப்பதிற் கண்ணுடையவர். இப்போதாலோசிக்கப்படும் திருத்தம் அதேயுரிமையை மற்றைய மதத்தினருக்கும் வழங்குங் கருத்துடையதே-றெவ். பிதா லோங் - கண்டனக் கூட்டத்தின் உள் மூச்சாய்த் திகழ்ந்தவர். கத்தோலிக்கரின் நெடுங்காலக் கொள்கையை என்ன செய்து விட்டார்! கத்தோலிக்கர் 1919 இற் சொன்னதென்ன?

"கத்தோலிக்கர் தம் பிள்ளைகளைப் படிப்பித்தற்கு — பாடசாலைக்குப் போதிய பிள்ளைகளிருந்தால் — தாம் பாடசாலைகள் ஸ்தாபிக்க அனுமதிக்கப் படல் வேண்டும். இன்னும் கத்தோலிக்கரல்லாத பிள்ளையொன்றிருக்கும் அயலில் அரசாங்க பாடசாலையாவது, அந்தப் பிள்ளைக்கொரு சமயமிருந்தால் அச் சமயத்தார் பாடசாலையாவதிருந்தால் அவ்விடத்தில்லை கத்தோலிக்க பாடசாலைக்காரர் அதை யேற்கும்படி ஆசிரியர் கட்டாயப் படுத்தக் கூடாது" என்பது இவரது வாதமாகும். கத்தோலிக்கரே சதா விரும்பி வாதாடிக் கொண்டிருந்த தீர்மானம் ஒன்றை யெதிர்த்து நிற்பதிற் பிதா லோங் முரண்படுகின்றாரே!

1919 ம் ஆண்டுக் கேள்விகளின் வியக்தா வியக்த பலங்களைப் பிதா லோங் ஆராய்வாரா? மேற்கூறியவை போன்ற கேள்விகள் மூலமே பாடசாலை தொடங்குவதிலும் பாடசாலைக்குதவி செய்வதிலும் பிள்ளைகள் சமயத்தையும் சிந்திக்குமாறு கல்விப்பகுதியாரைக் கத்தோலிக்கர் தூண்டினார்கள். அதற்காகக் கத்தோலிக்கர் போற்றப்பட வேண்டியவர்களே. 1919 ம் ஆண்டுக் கத்தோலிக்க கேள்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

### திருமாற்பேறு—
### —திருவிருத்தம்

மாணிக் குயிர்பெறக் கூற்றை
யுதைத்தன மாவலி பால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரி
யன கண்ட தொண்டர்
பேணிக் கிடந்து பரவப் படுவன
பேர்த்து மஃதே
மாணிக்க மாவன மாற்பே
றுடையான் மலரடியே

**அப்பர்சுவாமிகள்.**

## தமிழ்நாட்டுப் பெண்பாலார்

(மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

### பிற்காலத்துப் பெண்புலவர்

சங்ககாலத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் விளங்கிய பெண்புலவர்கள் பலர். அவர்களுள் பல அருமையான நீதிநூல்களை இயற்றியவராகிய ஔவையாரென்பவருடைய பாட்டுக்கள் இக்காலத்திலும் பிள்ளைகளுக்கும் உத்ஸாகத்தை உண்டாக்குகின்றன. மிக்க சுருக்கமாகவும் அகராதி வரிசையாகவும் இயற்றப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தனென்பனவும் வேறு நூல்களும் மிக்க சிறப்பையுடையன.

ஆண்டாளுடைய பாசுரங்கள் திவ்யப் பிரபந்தத்தில் ஒரு பகுதியாக விளங்குகின்றன. ஸ்ரீரங்கநாதனுக்குப் பூமாலையைச் சூடிக்கொடுத்த நாய்ச்சியாராகிய அவர் பாமாலையையும் பாடிக் கொடுத்தார்; ஆனால், அவர் சூடிக்கொடுத்த பூமாலை அக்காலத்தில் ஸ்ரீரங்கநாதனுக்கே பயன்பட்டது; அவர் பாடிக்கொடுத்த பாமாலையோ எவ்வளவோ வருஷங்கள் கடந்தும் வாடாமல் யாவருக்கும் பயன்படுகின்றது.

காரைக்காலம்மையாருடைய பாசுரங்கள் சைவத்திருமுறைகளில் ஒன்றாகிய பதினோராந்திருமுறையிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அத்திருமுறையில், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் பாடியருளிய ஒரு செய்யுளை அடுத்து இவருடைய பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. இதனால் இவருடைய செய்யுட்களுக்குச் சைவர்கள் எவ்வளவு சிறப்பளித்தனரென்று தெரியவருகின்றது. திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரே இவ்வம்மையாரைப் பாராட்டியிருக்கின்றனர்.

காவலம்வந்த நல்லூரில் இருந்த வரகுண பாண்டியனென்ற ஓரரசருடைய மனைவியார் பெரிய விதுஷியாகவும் சிவபெருமானிடத்தில் உறுதியான அன்புடையவராகவும் இருந்தார். அவர் சிவபெருமான்மீது பாடிய செய்யுள் ஒன்று வருமாறு:—

"ஆக்கையெனும் புழுக்குரம்பை
யணைந்தணையாப் பொருளை
அருவொளியைப் பராபரத்தைச்
சப்புறமா மறிவை
சீக்கமற மயிர்முளைக்கு
மிடமறவெங் கெங்கும்
விறைந்துநின்ற முழுமுதலை
கிளைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தகந்தத்
தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும்
பசுந்துணர்க்கற் பகத்தை
வாக்குமன விகற்பத்தா
லளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை
மனவெளியி லடைப்பாம்."

சில பழைய வரலாறுகளில் சோழனும் அவன் மனைவியும் சேர்ந்து பாடிய சில செய்யுட்கள் சொல்லப்படுகின்றன. தமிழ்ப்புலமையில் இருவரும் சமானமாக இருந்ததை இவ்வரலாறுகள் உணர்த்துகின்றன.

ஊற்றுமலை ஜமீன்தாரொருவருடைய மனைவியாராகிய பூஜைத் தாயாரென்பவர் தம் கணவர் பகையரசர்களாற் கொல்லப்பட்ட பிறகு தம் ஜமீனையிழந்து தென்காசியில் தம்முடைய இரண்டு குமாரர்களுக்கும் கல்விப்பயிற்சி செய்வித்து வசித்து வந்தார். ஒரு நாள் அவ்விருவருள் இளையவனை மூத்தவர் அடித்த போது அடிபட்டவர் தம் தாயாரிடம் வந்து அழுதார். அப்பொழுது அவரை நோக்கி மனம் வருந்திப் பூஜைத்தாயார்,

"தேரோடு நின்று
தெருவோ டலைகிற செய்திதனை
ஆரோடு சொல்வி
முறையிடு வோமித்த வம்புவியில்
சீரோடு நாமு நடத்துகொண்
டாலித்தத் தீவினைதான்
வாரா தடாசம்பி சிவல
ராய மருதப்பனே."

என்னும் செய்யுளைக் கூறினர்.

காஞ்சீபுரத்தில் அம்மைச்சி யென்ற ஒருத்தி இருந்தாள். அவள் தமிழ்ப் புலமையுடையவள். அவள் வீடு வரதராஜப் பெருமான் திருத்தேரோடும் வீதியில் இருந்தது. ஒரு முறை அந்தத் தேர் போகும் பொருட்டு அவள் வீட்டைச் சிலர் இடித்து விட்டார்கள். அப்பொழுது அவள் வருந்தி இரண்டு செய்யுட்கள் பாடினள். அவற்றுள், "பெருமானே! பாம்பையுங் குரங்கையும் உமக்கு ஊழியக்காரராகக் கூட்டி வந்தீரே; என்னுடைய வீட்டை இலங்கைக் கோட்டையென்று நினைத்தீரோ?" என்னும்கருத்துடையது ஒன்று; அது வருமாறு:—

"பாப்புக் குரங்கைப்
படையாகக் கூட்டிவந்தீர்
தேப்பெருமானே கச்சிச்
செல்வரே—கோப்பமைந்த
கொம்மைச் சிரலங்கைக்
கோட்டையென்று கொண்டீரோ
அம்மைச்சி வாழு மகம்."

ஆதில், தன்வீட்டை இடித்தவர்களைப் பாம்பென்றும் குரங்கென்றும் சமத்காரமாகத் தூஷித்திருப்பது அவளுடைய புலமையின் பயனென்று தெரிகின்றதல்லவா?

கந்தியாரென்ற ஜைன சந்யாஸினி ஒருவர் சீவகசிந்தாமணி முதலிய நூல்களினிடையே சில பாடல்களைப் பாடிச் சேர்த்திருக்கின்றார். அவர் செய்தது குற்றமாயினும் அச்செயல் அவருடைய புலமையை அறிவிக்கின்றது. அங்ஙனம் உள்ள செய்யுட்களின் கீழ் ஏட்டுப் பிரதிகளில், 'இவை கந்தியார் பாடல்' என்ற குறிப்பு எழுதப்பட்டிருக்கும்; நச்சினார்க்கினியரும் தம் உரையிற் குறித்திருக்கின்றார்.

கம்பருடைய தாதி ஒருத்தியும், உத்தரநல்லூர் நங்கை, தமிழறியும் பெருமாள் முதலியவர்களும் தமிழ்ப் புலமையுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

—(தொடரும்)

# அப்பர் சிவமயம்

(திரு. V. வீரசிங்கம் அவர்கள் சொற்பொழிவு)

(இது சித்திரைத் திங்கள் 23-ம் நாள் மானிப்பாய் இந்துக்கல்லூரித் திருநாவுக்கரசுநாயனுர் மண்டபத்தில் நடந்த குருபூஜைக் கொண்டாட்டத்தில் மேற்படி கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஸ்ரீ வி. வீரசிங்கம் B. A. அவர்கள் நிகழ்த்திய விரிவுரையின் பொழிப்பு)

சபையோர்களே!

இன்று நான் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட விஷயம் "அப்பர் சிவமயம்" என்பதே. சிவன் என்பது எமது கடவுளின் பெயர். மயம் என்பது தன்மையை அடைதல். அப்போது அப்பர் சிவமயம் என்பது அப்பர் சுவாமிகள் கடவுட்டன்மையை அடைதல் என்ற பொருளைத் தரும். எமது சாஸ்திரங்களில் "ஆமயம்" என்றோர் விஷயம் உண்டு. ஆ, என்றது பசு அல்லது ஆன்மா. ஆமயம் பசுவின் தன்மை அல்லது ஆன்மாவின் தன்மை. அப்பர் சுவாமிகள் தமது தேவாரத்தில் "ஆமயம் தீர்த்தெனை ஆளாய்க் கொண்ட" என்று கூறினர். இந்த வாக்கியம் தமது பசுமயத்தைக் கடவுள் நீக்கிச் சிவமயத்தைக்கொடுத்தார் என்ற கருத்தை அடக்கியிருக்கின்றது. எப்படிச் சிவமயம் அடைந்தார்? நான் சென்ற இரண்டு ஆண்டுகளாய்ப் பேசிய "அப்பர் சாதனை" என்ற விஷயத்தை நீங்கள் கேட்டிருப்பீர்கள். சரியை கிரியை, யோகம்என்ற பாதங்களையும் அப்பர் சரிவர அனுஷ்டித்து வந்த முறைகளை எடுத்துக்காட்டினேன். திருவீரட்டானத்தில் நின்று பாடியபொழுது சூலை நோய் நீங்கப் பெற்றுப் பின் தரிசித்த எல்லாத் தலங்களிலும் அத்திருவதிகை வீரட்டானேஸ்வரரையே கண்டார். பின் மரங்கள், மிருகங்கள், பறவைகள் யாவற்றிலும் அவரையே கண்டார். பின் அவரைத் தமது எண்ணத்திலும் மனத்திலும் கண்டதை "என்ணத்தான்" "மனத்துள்ளான்" என்றுங் கூறிக் காட்டினர். இவ்விதமாய்ச் சுவாமியவர்கள் தமது சாதனை முறைகளினுலே,நான் சிவமயத்தை அடைந்தார்கள்.

சிவமயமடைந்த அப்பர் சுவாமிகள் கடவுளையும் கண்டனர். மாணிக்கவாசகர், அப்பராதியோர் கடவுளைக் கண்டாரென்பது உண்மையேயன்றிப் பொய்யன்று. பொய்யைத் தேவாரப் பதிகங்களிற் கூறுவாரா! மேலும் எம்மால் ஏன் கடவுளைக் காணமுடியாது? உலகம் முழுவதிலும் பஞ்சமாபாதகங்கள் நிறைந்திருக்கின்றன. இந்த நிலையிற் கடவுளைக் காண முடியுமா? அவரைக் காண்பதற்கேற்ற கடவுள் விலாசம் அற்பமேனும் எம்மிடத்திலில்லை. அப்பரிடத்திற் கடவுள் விலாசமிருந்தபடியாற்றுன் கடவுளைக் கண்டனர். கடவுளை உள்ளபடி காணுது அவர் கண்டதாகத் தேவாரங்களிற் பொய்யைக் கூறிவைத்தாரா? இல்லை. தாம் அவரைக் கண்டதாகப் பத்துப் பதிகங்களுக்கு மேற்பட்ட பாட்டுக்களிற் கூறியிருக்கின்றுர். கடவுளைக்காண ஆரால்முடியும்? கள்ளன்றுன் கள்ளனைக் காண்பான். சிவமயமடைந்தவரே சிவனைக் காணலாகும். அப்படிச் சிவமயமடைந்தவரே அப்பர் சுவாமிகள். அவர் கடவுளைக் கண்டதைத் தேவாரங்களின் மூலமாய் நிரூபிப்பதை எடுத்துக் காட்டுவேன்.

முதலாவது நாயனுரவர்கள் எம்பிரானைக் கனவிற் கண்டதாகத் தேவாரங்களில் எடுத்துக் கூறுகின்றுர். கனவிலே பலவிதமுண்டு. சில உண்மையானவை, சில எண்ணங்களினுலும் வேறுபல காரணங்களினுலும் உண்டுபடுகின்றன. ஐம்புலச் சேட்டைகள் ஒடுங்கிநிற்கிற நிலையிலே கனவிற் கடவுளைக் காணுதல் எளிது. "வண்டோங்கு செங்கமலக் கழுநீர் மல்கு மதமத்தஞ் செஞ்சடைமேன் மதியஞ்சூடித், திண்டோள்க ளாயிரமும் வீசிநின்று திசைசேர நடமாடிச் சிவலோகனுர், உண்டார்க் காங்சலக்கோருறதி வேண்டி யொற்றியூர் மேய வொளிவண்ணனுர், கண்டேனுன் கனவகத்திற் கண்டேற்கென்றன் கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே," என்ற தேவாரத்தில் தாம் சிவபிரானைக் கனவிற் கண்டதாக எடுத்துக் கூறுகின்றுர். உலகத்தில் உண்மையான கனவுகாண்பவரும் உண்டு. சில ரோகாளர்கள் ஒருவர் தமக்கு நீர்கொண்டுவந்து கொடுப்பதாகக் கனவிற்கண்டு மறுநாட் பிணி நீங்கியிருப்பதை நான் அறிவேன். அப்படியே எம் சுவாமியவர்களும் தாம் கண்ட கனவின் பலனுக "என்றன் கடும்பிணியும் சுடுந்தொழிலும் கைவிட்டவே" என்று கூறுகின்றுர். இன்னெரு தேவாரம், பட்டமுந் தோடுமோர் பாகங் கண்டேன் பார்திகழப் பலிதிரிந்துபோதக்கண்டேன், கொட்டி நின்றிலயங்களாடக் கண்டேன் குழைகாதிற் பிறை சென்னியிலங்கக் கண்டேன், கட்டங்கக் கொடிதிண்டோளாடக் கண்டேன் கனமழுவாள் வலங்கையிலிலங்கக் கண்டேன். சிட்டனைத் திருவாலவாயிற் கண்டேன் தேவனைக் கனவிலுன் கண்டவாறே" என்றிருக்கின்றது. திருவாலவாய்க்குச் சென்றபொழுது கடவுளைத் தாம் கனவிற் கண்டவாறு ஆங்குமப்படியே கண்டதாகக் கூறுகின்றுர்.

பின் கடவுள் தம்மைக் காட்டி மறைக்கும் விதங்களையும் கவனிப்போம். சில வேளைகளில் ஒருவர் கூப்பிடும் சத்தங் கேட்கும். சென்று பார்த்தால் ஒருவருமில்லை. சிலசமயம் கனவிலும் ஓர் மனிதன் தோன்றி மறைவதுண்டு. இப்படிக் கூப்பிடுவது தோன்றுவது மறைவதாகிய விஷயங்களும் அப்பர் சுவாமிகளது அனுபவத்திலிருப்பதை அவர் எங்ஙனம் தேவாரங்களில் எடுத்தாளுகின்றுரென்பதை உங்களுக்குக் கூறுவேன். "தஞ்சேகண்டேன் மரிக்கிலாதாமென்றேன, அஞ்சேலுன்னையழைக்க வந்தேனென்றுர், உஞ்சேனென்று கந்தேயெழுந்தோடந் தேன். அஞ்சேசவல்லரே வாய்மூரடிகளே" "கழியக் கண்டிலேனை கண்ணெதிரே கண்டேன், ஒழியப்போந்திலேனெக்கவே யோட்டாதேன் வழியிற்கண்டிலேன் வாய்மூரடிகள் தம் சுழியிற்பட்டுச் சுழல்கின்றதேன் கொலோ" என்றும் மற்றும் சில தேவாரங்களில் "இல்லமே தாம் புகுகா விடுமின்பிச்சை யென்றுருக் கெதிரே பூங்கேனெக்குங் காணேன்," என்றும் "கென்னலையோசோடேந்திப் பிச்சைக்கென்று வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்" என்றும் கூறுவதாலும் எம் நாயனுரவர்களுக்குக் கடவுள் தம்மைக் காட்டி மறைத்ததும், சத்தங்கேட்கச் செய்ததும் புலப்படுகின்றன. நான் ஓடேந்திப் பிச்சைக்கு வந்தாரென்றும் "உம்மூரேது" என்று கேட்கப் பேசவில்லையென்றும் இருக்கின்றது. "தஞ்சே கண்டேன்," "கழியக் கண்டிலேன்" என்ற பாட்டுக்களில் கடவுள் தம்மைக் காட்டி மறைக்கிற அனுபவம் கூறப்படுகின்றது. ஒரு தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் தம் முன் வந்து தோன்றினுரொருவரைச் சிவன்றுனென நினைந்து "உம் ஊரேது பழனமோ, நெய்த்தானமோ, பூந்துருத்தியோ" என்று கேட்பதைக் காண்கின்றோம். இப்படிக் கடவுள் தம்மை மக்களுக்குக் காட்டு முறைகளைக் குறிக்கும் பலவித அனுபவங்களையும், கதைகளையும் முற்காலச் சனங்கள் அநேகம் கூறுவதுண்டு. இக்காலத்தில் இப்படிப்பட்ட கதைகள் கிடையா. ஏனென்றுல் கடவுளின் அனுபவங்களைப் பெறுவதற்கேற்ற பக்குவம் மக்களிடத்தில் இப்போது இல்லை. "நஞ்சடைந்த கண்டத்தர்" என்ற தேவாரத்தில் அப்பர் "உம்பேரேது" என்று கேட்டபோது "புறம்பய நம்மூரென்று போயினரே" என்று கூறுகின்றுர். இச் செயல்களால் சிவபெருமான் தம்மைக்காட்டி மறைத்ததும், அப்படிக் காட்சி கொடுத்து மறைந்தவர் சிவபெருமானேஎன்று அப்பர் அறிந்ததும் வெளியாகின்றது.

இனி அப்பர் சுவாமிகள் கடவுளை நேரிற்கண்ட விதங்களை அவர் எடுத்துக்காட்டுகின்றபடி கவனிப்போம். "சொல்லானைப் பொருளானைச் சுருதியானை ........................ நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே," என்றும், "எத்திக்குமாய் நின்ற விறைவன்றன்னை ........................ செங்

(தொடர்ச்சி 7ம் பக்கம்.)

# கல்விச் சட்டத் திருத்த யோசனை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியின் முதற்பகுதி கிறீஸ்தவர் அல்லாதவர் பாடசாலையிற் சராசரி 30 க்குக் குறையாமலிருக்க வேண்டு மென்கிறது. இரண்டாம்பகுதி எல்லையை "ஒரு மைலுக்குள்" என வரையறுக்கிறது. இப்போதாலோசிக்கப்படும் திருத்தம் பாடசாலை கட்டி நன்கொடை பெறும் வரையிலே கிறீஸ்தவ பாடசாலைகளையும் அதே விதிக் கிசையச் செய்வதைத் தானே நோக்கமாகக் கொண்டெழுந்தது! பின்னைப் புத்த ராசாங்கம் கிறீஸ்தவச் சிறுபான்மையோருக்குக் காட்டும் அநியாயம் எங்கே?

பிள்ளைகள் மனேஜ்மெண்ட் சமயத்தாரானல் சராசரியை 30 ல் இருந்து 15 ஆகக் குறைக்கக் கண்டனத்தில் முனைந்து நிற்கும் கிறீஸ்தவர் சம்மதிப்பாரா? அல்லது 1922 க்கு முன் இருந்தபடி பிள்ளையின் சமயத்தைப் பெல்லாம விடுத்து, சராசரி 60 ஆக வைத்துக் கொள்ளச் சம்மதிப்பாரா? இவற்றுக்குச் சம்மதிக்கும் நடுவுநிலையில்லாது விட்டாற் கருத்தென்ன? தமது சமய விதைப்பை நடாத்துதற்கு — அரசினர் நன்கொடை பெறும் பாடசாலைகளைத் திருத்தற் கருவிகளாகக் கொண்டு நடாத்துதற்கு — இலவச உத்தரவுப் பத்திரங் கேட்கின்றுரென்பது வெளிப்படையல்லவா? கேட்டுக் கேள்வியில்லாத உத்தரவுப் பத்திரத்தை இவர் பறிக்க நிற்கிறுர் என்று குற்றம் சாத்துவது பிசகாகுமோ?

பெரும் பகுதியினராலே தாராளத் தன்மையோடு நடாத்தப்படச் சிறுபகுதியினர் காத்திருப்பது நீதியே. ஆனுற் பெரும்பகுதியாரைச் சிறிய கோட்டுக்குள்ளே நிறுத்திச் சதா அடிமையாக விரும்புவதை என்னென்பேம்! ஆட்சிமுறையறியாதார் பைத்திய மென்பேமா? அவமதிப்பின் சிகரம், மதத்தின் சிகரமென்பேமா?

விசேடமாகச் சிறிய கிராம பாடசாலைகளில் 30 சராசரி காத்திருப்பது அசாத்தியமெனக்கண்டு சில மாசங்களுக்குமுன் யாமொரு பிரேரணை கல்விச் சங்கத்திற் கொண்டு வந்தோம். 30 சராசரியை 23 ஆகவேனும் குறைக்க வேண்டுமென்று பிரேரித்தோம். சங்கத்திற் கிறீஸ்துவரல்லாதோர் 6 பேரும் கிறீஸ்துவர் 14 பேரும் இருந்தாராகவும், கிறீஸ்துவரில் ஒருவரேனும் இதை ஆதரிக்கவில்லை; ஒருவரேனும் இத்தடையை நீக்கத் துணை செய்யவில்லை.

30 ஐப் 15 ஆகக் குறைத்தல் எந்தச் சமயத்தவரும் தம் பிள்ளைகட்காகப் பாடசாலை அவசியம் கட்டவேண்டிற் கட்டுதற்கு, எவ்வாற்றுனுந் தடை செய்யாதே. கிறீஸ்துவர் — விசேடமாகப் புறெட்டெஸ்தாந்தர் — கல்விச் சேவைக்கு மாத்திரம் முற்பட்டு நிற்பவராஞல், இவ் வாலோசனையைக் கேட்டவுடனே, பேரமா புரியோடு சேர்ந்துஇரைந்து புகைவதேனே? இந்த ஆலோசனை எந்தச் சமயத்தவருக்கும் தமது பிள்ளைகளைத் தமது பாடசாலைகளிற் படிப்பித்தற்கு வேண்டிய சந்தர்ப்பம் அளிப்பதையே நோக்கமாகக் கொண்டது என்பதை நீதியாய உணர்ச்சியிருந்தால் இவர்கள் ஒப்புக் கொள்ளாது விடுவார்களா?

கிறீஸ்துவரது வாதமென்ன? பெற்ருேர் தம் பிள்ளைகள் படித்தற்குரிய பாடசாலையைத் தெரிவு செய்தற்குச் சுயாதீனம் பெறவேண்டு மென்பது. ஆகா! எத்துணை உத்தம சிந்தனை! இவர்தம் சொல்லாலும் நடையாலும் கிறீஸ்துவப் பிள்ளைகள் கிறீஸ்துவப் பாடசாலையிற் கற்க வேண்டு மென்பதைக் காட்டி விட்டனரே. கத்தோலிக்கர் வெகு சாவதானமாயிருந்து ஆர்ச்பிஷொப்பொஞ்சினது பராமரிப்பின் கீழ்க் கத்தோலிக்க குழந்தைகள் கத்தோலிக்க பாடசாலைகளிற்படித்தற்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தியாகச் செய்து முடித்து விட்டனர். தம் பிள்ளைகள் புறெட்டெஸ்தாந்து மத பாடசாலையிற் கற்பதைப் பகைய கத்தோலிக்கர் சகிக்கமாட்டார். இஃதில்லாருயிற் கிறீஸ்துவ தருமமென்னவோ? றேமன் கத்தோலிக்கரும் புறெட்டெஸ்தாந்துரும் ஆகிய கிறீஸ்துவர் யாவரும், தம்மையும் ஏனைச் சமயத்தவரையும் ஒரு சேரத் தாக்கும் பிரமாணங்களை ராசாங்கம் விதிக்கும்போது — சமய சமநோக்குப் பேசும் இராசாங்கம் விதிக்கும்போது — கத்திகட்டி நிற்க வேண்டாவோ? இப்போது புத்தர் சைவராயினேர் தேவைகட்கு மிக மிகக் குறைந்த தொகைப் பாடசாலைகளே யுளவாகும். புத்தர் சைவர் தொகைக்குத் தக்க புத்த சைவப் பாடசாலைகள் இருக்கும் போதே பெற்றேர் தெரிவு தொழிற் படக் கூடும். இப்போதைய நிலையிலே, நமது கிறீஸ்துவக் கல்விநாயகர்கள், தமது இரக்கப் பெருக்கத்தினுலே, புத்தர் சைவராகிய பெற்றோருக்கு "அஞ்ஞானிக" ளாகிய பெற்றோருக்கு வழங்குந் தெரிவு "ஹொப்சன்" தெரிவல்லவா? தெரிய ஒன்றுமே யில்லாத நிலையிலே வைத்து விட்டுத் தெரிவுரிமை கொடுப்பதல்லவா?

கிறீஸ்தவ பாடசாலைக் காரர் விளம்பரஞ் செய்வதில் வெகு கெட்டிக்காரர். அவர் நாளிலும் பொழுதிலும் கிறீஸ்துவரது கல்வி நாயகத்துவத்தைப் பற்றிப் பறையடித்துக் கொண்டும் கிறீஸ்துவர் பாடசாலைகள் ஏனையவர் பாடசாலைகளிலும் மேதக்க வல்லப முடையன வென்பதைச் செருக்கோடு சோதித்துக் காட்டிக் கொண்டும் திரிவர். ஆனுல் வாஸ்தவத்தில் நிலையெப்படியோ? இப்போதைய பாடசாலைகளைச் சற்றே பார்த்து விடலாமே. இவரறைப் பற்றிப் பிரமாணிக்கத்தோடு நம்மாற் பேச முடியும். கிறீஸ்துவரல்லாதார் பாடசாலைகளே மேம்பட்ட வல்லபத்தோடு விளங்குவது மிகப் பெரும்பான்மை. இவற்றைப் பின்பற்றித் தாம் நடத்தற்கவர் செய்யும் முயற்சியினுலே கிறீஸ்துவர் இவற்றைத் தமக்குத் தெரியாமலே புகழுகின்றனர். இவற்றில் எதனையும் எடுத்துக் கொண்டு அதன் சந்ததியிலுள்ள கிறீஸ்தவ பாடசாலையோடொப்பிட்டுப் பார்த்தால் இது கட்டட விசேடம், தளபாட விசேடம், ஆசிரியர் விசேடம், பரீட்சைப் பெறுபேற்று விசேடம் என்னும் ஒவ்வொன்றிலும் மேம்பட்டு விளங்குவது தெரியும். அம்மட்டோ! தமது இயற்கைச் சுவாபத்திலுள்ள நல்லமிசங்களை வெளிப்படுத்தக் கூடிய கல்வாசனையும் கிறீஸ்துவரல்லாதார் குழந்தைகட் குண்டு. இது எவரும் பரீட்சிக்கக் கூடிய எழுத்துக் கணக்கோடுள்ள காரியம்.

ஆங்கில பாடசாலைகள் சம்பந்தப்பட்ட வரையிலே, சில கிறீஸ்துவர் பாடசாலைகள் ஏனையோர் பாடசாலைகளிலும், விசேட திறமையுடையன என்பது உண்மையே. இது பிரித்தானியர் 140 வருடத்துக்கு மேற் செய்து கொண்டு வரும் விசேடபண உதவியினுலும் போஷணையினுலும் வந்ததாகும். கிறீஸ்துவ ரல்லாதாருக் கிடப்படும் விசேட முட்டுக் கட்டைகளும் குறுக்கிடும் சங்கடங்களும் இருந்தும் அவர் பள்ளிக் கூடங்களிற் சில தீவிரவளர்ச்சியடைகின்றன. திறமைப் பந்தயத்திற் கிறீஸ்துவரை முறியடிக்கும் குறிகளுங் காணப்படுகின்றன. எது எப்படி யிருந்தாலும், புத்த பாடசாலையேனும் சைவப் பாடசாலையேனும் புத்த சமயப் பிள்ளைகளுக்கும் சைவ சமயப் பிள்ளைகளுக்கும் மனமுங் குணமும் செவ்வனே வளர்த்தற்கேற்றனவையே.

நமது ஆங்கிலக் கல்வி நாயகர்களிற் சிலருக்கு "ஏழை மனப்பான்மை" போனபாடில்லை. சைவ மனேஜர் மாரிற் சிலரும் புத்த மனேஜர்மாரிற் சிலரும் ஆளும் சாதியைச் சேர்ந்த கிறீஸ்துவ மிசனரிமார் பாடசாலை நடாத்துகையிலே திறமை வாய்ந்தவரெனப் பாராட்டுவதிலிருந்து இது துணியப்படும். இவர்கள் நமக்குப் புறம்பானதொரு நாகரிகத்தருவிலே காய்த்துப் பழுத்த பழவர்க்கங்கள். அரசியல் விஷயத்துக்காக வெளித்தோன்றியவர்கள். இவர்களைப்பற்றி நாம் சித்தையோடு சிந்திக்க வேண்டியதில்லை. இந்தச் சுதேசிப் போலிகள் போயொழிய வறுக் கொண்ட வீரச்சாதி தோன்ற வேண்டும்.

நாம் இழந்து விட்ட சாதியுணர்ச்சியை மீட்டும் பெறுதற்கு நிச்சயமான வழி புத்தரும் சைவரும் தம்மைக் குறுக்கிடும் தடைகளையெல்லா மறுத்துத் தம் குழந்தைகள் நல்வாசனை பெறுதுச் சுசாதிய உணர்ச்சிக் கேற்ற முறையிற் பயிலக் கூடியதாக வேண்டிய வரை பாடசாலைகளைத் தொடக்கிக் கிறீஸ்துவரது குடைச்சலையும் புற நாகரீகத்தின் அரசாட்சியையும் வரம்பு கட்டி விலக்கிக் கொள்ளுதலாகும்.

சைவவித்தியாவிருத்திச்
சங்கம்
16 - 5 - 37

## பண்டாரக் குளத்தடியில் அடிபிடி

(நமது நிருபர்)

நல்லூரைச் சேர்ந்த பண்டாரக் குளத்தடியில் வசிக்கும் கனகு என்பவருக்கு அவ்வூர் நடராசா என்பவரும் தாயாராகிய ஆச்சிக்குட்டியுமாக அடித்துப் படுகாயமுண்டாக்கியதாக அறிகிறேம். காயக்காரன் சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டார்.

## கிணற்றுள் தள்ளிவிழுத்தினுரா?

(நமது நிருபர்)

உரும்பராயில் வசிக்கும் தம்பையா சின்னத்துரை என்பவர் சென்ற 15ம் திகதி அவ்வூர் ஆறுமுகம் குருநாதர் கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டு நிற்கையில் தள்ளிக் கிணற்றுக்குள் விழுத்தியதாகக் குற்றஞ்சாட்டி அவ்வூர் விதானையார் ஓர் வழக்குத் தொடர்ந்தார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல. 9387.

கொக்குவில்
1. கார்த்திகேசு விசுவலிங்கமும்
2. பெண்பிரசாதியும்—வழக்காளிகள்

எதிராக

வண்ணுர்பண்ணை மேற்கு
முகிதீன்கண்டு கைம்பெண் - முகம்மது மீரு முகிடீன் நாச்சியா—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் மேற்றநித்தவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1937ம் வருஷம் ஆனி மாதம் (ஜுன்மீ) 15உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் அர்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 1116.

1936ம் ஆ மாசிமீ 18 உ தொடக்கம் ரூபா 800 க்கு வருஷம் 1க்கு 100 க்கு 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 118-54 சதமும்.

காணியின் விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை மேற்கிலே ஆனை விழுந்தானும் புளியடியும் பம்மை வெளியும் பர. $3\frac{1}{16}$ வீட்டில் தெற்கு அறையும் நடுஅறையில் தெற்குப்பக்கமாக அரைவாசியும் செய்பயிர்களும் பனையும் கிணறும் எல்லை கிழக்கு—முகம்மது சதக்கத் தல்லா முத்து முகம்மது பெண் முகிடீன் பதும்மாநாச்சியாவுக்கும் முகம்மது சுல்தான் அப்துல்காதருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்களும் இக்காணிக்குவரும் கையொழுங்கையும் சுல்தான் அப்துல்காதர் முகம்மது கிஸுவுக்கும் உம்மைசாயினு லெப்பை சுல்தான் முகிடீனுக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு—முத்துமுகம்மதுவுக்கும் முகம்மது முகிடீனுக்கும் உம்மைசாயினுலெப்பை சுல்தான் முகிடீனுக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு—முத்து முகம்மதுவுக்கும் முகம்மது முகிதீனுக்குரிய ஆதனமும் ஒழுங்கையும். தெற்கு—முகம்மது சதக்கத் தல்லா பெண் பதும்மாநாச்சியாவின் ஆதனம். இதடங்கலும் அதற்குரியவைகளும்.

க. பொன்னப்பா
வெர்நீஸ்மேஸ்தரும்,
கொம்மிஷனரும்.

இணுவில்
20—5—37.
Mis 34. 24-5-37

# அப்பர் சிவமயம்

( இரண்டாம்பக்கத் தொடர்ச்சி )

காட்டங் குடியதனிற் கண்டேனே," என்றும் தாம் கடவுளை நேரிற் கண்டதாகக் கூறுகின்றார். இப்படிக் கடவுளைக் கண்டாரென்பதை ஆலயத்திலுள்ள சிலையைக் கண்டதாகவும் கருதலாம். ஆனால் அச்சிலையானது இவருக்கு "எத்திக்குமாய் நின்ற இறைவன்றன்னை உணர்த்தியது கவனிக்கத்தக்கது. சிலையானது இவருக்குக் கடவுளாகக் காணப்பட்டது என்றுகுதல் கொள்ள வேண்டும். மேலும் "நாரையூர் நன்னகரிற் கண்டேனே" செங்காட்டங் குடியதனிற் கண்டேனே" என்பதனால் சுவாமிகள் இத்தலங்களிற் சிவபிரானை உண்மையாகக் கண்டாரென்றே கொள்ளவேண்டும். இன்னும் திருவெண்ணியூருக்கு எம் நாயனாரவர்கள் சென்றபொழுது ஓதிய தேவாரங்களை ஆராய்வோம். "நல்லனைத்திசழ் நான்மறையோதியைச் சொல்லினைச் சுடரைச் சுடர்போலொளிர் கல்லனைக் கடிமாமதின் மூன்றெய்த வில்லனை நெருநற்கண்ட வெண்ணியே" என்றும், "சுடரைப் போலொளிர் சுண்ண வெண்ணீற்றனை, யடருஞ் சென்னியில் வைத்த வழுதினைப், படருஞ் செஞ்சடைப் பான் மதிசூடியை, யிடரை நீக்கியையா கண்டவெண்ணியே" என்றுங் கூறுகின்றார். முதற் செய்யுளில் திருவெண்ணியூரில "கடிமாமதின் மூன்றெய்த வில்லனை நெருநற்கண்ட வெண்ணியே" என்று அத்தலம் கடவுள் முன்னொருகாலம் காட்சி கொடுத்த பாக்கியம் பெற்ற தலமென்று போற்றுகின்றார். அடுத்த செய்யுளில் "மதிசூடியை இடரை நீக்கியையான் கண்டவெண்ணியே" என்று கூறுவதனால் மற்றவர் காணாமல் தாம கண்டதாகக் கூறுவதனால், திருவெண்ணியிற் சிலையையன்று அங்கு கடவுள் இவருக்குக்காட்சி கொடுத்தருளியிருந்தாரென்பது வெளிப்படை. ஏனென்றால் சில மற்றவர்களுடைய காட்சிக்கும் எட்டியதுவே. இன்னொரு தேவாரத்தை நோக்குங்கள். "நான்மறையும் போதகத்தினுரிவை கண்டேன் காலிற் கழல் கண்டேன் கரியின்றோல் கொண்டுன் மறையப் போர்த்த வடிவுங்கண்டேனுள் கமனம் வைத்தவுணர்வுங் கண்டேன், நான்மறையானோடு நெடியமாலு நண்ணி வரக்கண்டேன் திண்ணமாக மான்மறி தங்கையின் மருவக் கண்டேன் வாய்மொழிகளை நான் கண்டவாறே." இந்தத் தேவாரத்தில் "நான்மறையானொடு நெடியமாலு நண்ணி வரக்கண்டேன் திண்ணமாக" என்று கூறுவதனால் இவருக்குக் கடவுள் இங்கு காட்சிகொடுத்தாரென்பது திண்ணம். "கண்டேன்" என்று சொல்லுவதோடு அமையாமல் "திண்ணமாகக் கண்டேன்" என்றுங் கூறினர். இதில் சிவன் மாத்திரமல்ல, பிரமாவும், விஷ்ணுவும் கூடிவந்து காட்சிகொடுத்திருக்கிறார்கள். "சொல்லானைப் பொருளானை..................நாரையூர் நன்னகரிற் கண்டேனே," என்றும் "தலையேந்து கையானை... ..............கண்ணாரக் கண்டுய்ந்தேனே," என்றும் "பல்லோடு தலைசடைமே லுடையான்றன்னை .................. கண்ணாரக்கண்டேனே" என்றும் வரும் தேவாரங்களில் "கண்ணாரக்கண்டுய்ந்தேனே" கண்ணாரக்கண்டேனே" என்ற வாக்கியங்கள் கவனிக்கத்தக்கன. "கண்ணாலைக் கண்டேன்" என்று சத்தியம் செய்யும் வழக்கம் எம்மவரில் உண்டு. உண்மையாகக் கண்ட விஷயத்தையே "கண்ணாலைக் கண்டேன்" என்று கூறுவார்கள். "கண்ணாரக்கண்டேன்" என்பது ஒருவாறு "கண்ணாலைக் கண்டேன்" என்பதற்குச் சரியாயிருக்கின்றது. அப்பர்சுவாமிகள் இத் தேவாரங்களிற்றும் கடவுளைக் கண்ணாரக் கண்டதாக வற்புறுத்திக் கூறுகின்றார். அல்லாமலும் சிவபெருமான் மண்டையோடு கொண்டுதிரிகிறார் என்று மேற்படி மூன்று தேவாரங்களிலும் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. சாதாரணமாய்க் கடவுள் தலைமண்டையோடு கொண்டு திரிகின்றாரென்றால் நம்புவதற்கிடமில்லை. ஆனால், அப்பர் சுவாமிகள் கடவுள் தலை மண்டையோடுகொண்டு திரிவதைத் தாம் கண்டதை மற்றவரும் நம்பும்பொருட்டுத்தான் "கண்ணாரக் கண்டேன்" என்று வற்புறுத்துகின்றார். அப்பர் சுவாமிகளது ஈதனையால் அவருக்குக் கடவுள் தம்மைக் காட்டி உலகுக்குச்சாட்சியும் பகர்வித்தவர். எல்லோரும் இப்படிக் கடவுளைக் காணமுடியுமா? பக்குவம் அடைந்தவரேகாணமுடியும். தம் சுயம் கருதிவாழ்ந்து பக்தியின்றிப் பஞ்சமா பாதகங்களுக்கு ஆளாயினவர் கடவுளைக் காண்பது அரிது.

இன்று நாமேன் அப்பர் சுவாமிகளின் குருபூசையை நடத்தி இப்படிக் கொண்டாடுகின்றோம்! இத்தினம் சித்திரையிற் சதயமாகும். ஆமயம் நீங்கப்பெற்றுச் சிவமயத்தை யடைந்து இருப்பதனாரில் "என்னு கேனென்சொல்லி யென்னு கேனோ' என்றத் தொடக்கத்துத் திருப்பதிகம் பாடி எமது அப்பர் சுவாமிகள் சிவபதத்தை அடைந்தனர்.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காய்: மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12, மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம் 8 விகிதமாகக் கொடுக்கப்படும். உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம். காணி ஈடாக வைத்துக் கொண்டு பிணையுடன் கடன் எடுக்கலாம். (இத்தக்கடனையும்) பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கோள்ளலாம்.

சி. செல்லப்பா
மானேஜர்.


Y. 225 21-11-36—20-11-37 (தி)

வேலை செய்யும் திறத்தையோ

நீடித்த பாப்பையோ

விலையையோ

## எதை நீங்கள் பார்த்தாலும்



மொரிஸ்—கம்மர்வல்

## டிரக்ஸ்

உங்கள் பணத்தைப் போட்டுவைப்பதற்குத் தகுந்ததாகும்.

வேண்டுவோர் எழுதி விபரம் அறிந்துகோள்ளலாம்.

சோல் ஏஜண்ட்

### உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட் கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,

திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னர், அநுராதபுரம் ஆகிய இடங்களுக்கும் சோல ஏஜெண்ட்ஸ்

### வி. செல்வத்துரை & சன்ஸ்

அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்.
ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y. 17 19-8-36.— 18-8-37. (தி)

## "ஹின்டன்பர்க்" விபத்தில் 36 பேர்பலி

ஹர் ஓட்டோ எர்னஸ்ட் என்னும் 78 வயதுள்ள பருத்தித் தாருக்காரர் ஹின்டன்பர்க் விமான விபத்தில் அடைந்த காயங்களுக்கு ஆற்றாது உயிர் துறந்து விட்டார். இவரைச் சேர்த்து மொத்தத்தில் 36 பேர் இறந்திருக்கிறார்கள்.

# சைவ பரிபாலன சபை.

:O:

## 1926-ம் 27-ம் ஆண்டுகளில் நிகழ்ந்தவை

(17-5-37ன் தொடர்]

பிரதமாசிரியர் N. செல்லத்துரை இளைப்பாறியமையால் அவரது இடத்தில் ஆக்ஸ்போர்த்லாந்திலுள்ள "அபர்டீன்" சர்வகலாசங்கத்து M. A. பரீக்ஷையில் அதிக திறமையோடு சித்தியடைந்தவரும் காலியிலுள்ள மகிந்த கலாசாலையிலே பிரதமாசிரியராகச் சிலகாலம் கடமை பார்த்தவரும் அகிம்சாதருமத்தைக் கைக்கொண்டு புலையும் கொலையுந் தவிர்த்து தாவர போசனத்தையே விசேஷமாகக் கொண்டவரும் கல்லூரிப் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் தமிழ்ச் சாதிய உடையைத் தரித்தவருமாகிய

### Mr. W. A Troup M. A.

என்னும் மேல்நாட்டவரை இந்துக் கல்லூரியின் பிரதமாசிரியராக நியமித்தார்கள். அவர் 1926 ஆ வைகாசி மீ 7உ முதல் தமது கடமையைக் கைபேற்று நடத்திவந்தார். இவர் வந்த பின் இந்துக்கல்லூரி அடைந்த திருத்தங்கள் மிகப்பல.

### Governor Visits J. H C

"At the Jaffna Hindu College His Excellency Sir Hugh Clifford was received on the 9th June 1926 by the Hon'ble Sir Ambalawanar Kanagasabai, Mr. Nevins Selvadurai (former Principal) and Mr. W. A. Troup, the Principal. A guard of honour was furnished by the Scouts. An address of welcome was read in the hall by a Senior student on behalf of the Board of Directors, the Principal the staff and the students and the Governor, replying congratulated Mr. Selvadurai, the former Principal on his long and able service rendered in the cause of education and wished that the future of the College would improve at the hands of Mr. Troup. His Excellency was taken round the College buildings and the class rooms. At the Chemistry block His Excellency spoke a few words of advice to the students."

கதாப்பிரசங்கம்

இச்சபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்திலே 1926ஆ புரட்டாசி மீ 9உ சச்சிதானந்தராஜயோகிகளால்மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் பரமாசாரியரிடம் உபதேசம் பெற்ற பாகம் தொடக்கமாகப் பிரசங்கம் செய்யப்பெற்றது. பிரசங்கமுடிவில் இச்சபை அங்கத்தவர்கள் சிலரும் இந்துக்கல்லூரி அதிகாரசபை அங்கத்தவர்கள் சிலரும் அக்கல்லூரி உபாத்தியாயர்கள் சிலரும் மாணக்கர்கள் சில நம் ஏனைய சைவாபிமானிகள் சிலரும்சேர்ந்து யோகிகள் தொடங்கிநடத்திவந்த திருவாலங்காட்டு தேர் திருப்பணிக்குத் தக்க ஒரு பெருந்தொகைப் பணம் உதவினார்கள். இதைக்கண்ட பிற சைவாபிமானிகளும் தத்தம் ஊர்களிலெல்லாம் யோகிகளை அழைத்து உபசரித்து தேர்த்திருப்பணிக்காக ஒவ்வோர் தொகைப் பணம் உதவினார்கள். இப்படியாக உதவியவர்களின் பெயரெல்லாம் அவ்வப்போது வெளியான இந்துசாதனப்பத்திரிகைகளில் விபரமாக வெளிவந்துள்ளன.

### E S L C Exam

"Out of the 13 candidates who sat for the E S L C Examination, held in October 1926 from the Jaffna Hindu College 11 came out successful 6 in the First Division and 5 in the Second Division".

"Mr. M. Sabaratnasinghe B. A having resigned his place as Editor, Hindu Organ the executive committe of the Sabai held on the 21st December 1926 under the Presidency of the Hon'ble Sir A. Kanagasabai resolved to appoint

### Mr M S Rajaratnam

B. A. Advocate, as Editor".

அக்ஷய ஹு கார்த்திகை மீ 21உ (-12-26) பகல் 12 மணிக்கு மேல் நிகழ்ந்த மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் இந்துசாதன ஆலயக் கட்டடத்துக்கு 11 கதவு நிலைகள் நிறுத்தப்பட்டன.

### 'XXI Annual General

meeting of the Board of Directors of the Jaffna Hindu College was held on the 23rd January 1927 at the College Hall with the Hon'ble Sir Ambalawanar Kanagasabai, the President in the chair.

The minutes of the previous annual general meeting were read and confirmed.

The Secretary's Report was read and adopted.

The Treasurer's Balance-Sheet was accepted as corrcet.

The following Directors were re-elected. Messrs V. Casipillai, C. Rasanayagam, S. Kandayya, A. Cathiravelu. W. Duraiswamy, R SivaGuruNather, S. Ehamparam, P. Rajagopal and V S S Kumaraswamy and the following gentlemen were newly elected Directors Messrs. V Ponnambalam, V. Ramalingam, G. Subramaniam, M. S. Rajaretnam and the Hon'ble Mr. T. M. Sabaretnam

The following Office-Bearers were elected:

*President*: The Hon'ble Sir A. Kanagasabai.

*Vice-President*: Mr. V. Casippillai

*Secretary*: Mr. A. Ambalawanan.

*Asst. Secretary*: Mr. V. Ponnampalam

*Treasurer*: Mr. S. Ehamparam

*Auditor*: Mr. G. Subramaniam

*Committee*: The Hon'ble Mr. S. Rajaratnam, Mudaliar M. S. Ramalingam and Mr. S Kandayya ......The College under the guidance of its new Principal, Mr. W. A. Troup M. A.; is steadily forging ahead. Inter-Arts and Science Classes have been formed. More than hundred new boys have been admitted. Owing to the large influx of boarders the College authorities have been compelled to rent out a commodious house in the vicinity. A highly qualified and devoted staff is ably seconding the efforts of the Principal to make the Hindu College a first rate College in the Island......."

குருபூசை

இச்சபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்திலே பிரபவ ஹு சித்திரை மீ 5உ (27-4-27) புதன்கிழமை பகல் சமயகுரவர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனாரது குருபூசை வழக்கம் போல் சிறப்பாக நடைபெற்றது.

கதாப்பிரசங்கம்

இச்சபையாரின் வேண்டுகோள்ப்படி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்திலே 1927 ஆ சித்திரை மீ 29உ சச்சிதானந்தராஜயோகிகளால் தடாதகைப்பிராட்டியார் திருக்கல்யாண வைபவம் புக்கவாத்திய சகிதமாகப் பிரசங்கிக்கப்பெற்றது.

### இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு கிழக்காக அக்கல்லூரி அதிகாரசபையாரால் புதிதாயமைக்கப்பெற்ற இவ் வித்தியாசாலையில் பிரபவ ஹு சித்திரை மீ 24உ (6-5-27) சுக்கிரவாரத்தன்று காலை ஒன்பதரை மணியளவில் நிகழ்ந்த மிதுனலக்கின சுபமுகூர்த்தத்தில் வண். வைத்தீஸ்வர சுவாமி கோயில் பிரதம அர்ச்சகர் க. வைத்தியநாதக்குருக்களாலும் இந்துக்கல்லூரி சிவஞானவைரவசுவாமி கோயில் அர்ச்சகர் வ. பஞ்சாக்ஷரக்குருக்களாலும் விக்கினேஸ்வர பூசை, சரஸ்வதி பூசை, முதலியன செய்யப்பெற்ற பின்னர் சச்சிதானந்த ராஜயோகிகளால் சிவகுருநாதன்முதலான சிறுவர்கள் அநேகருக்கு விதிப்படி வித்தியாரம்பம் செய்யப்பெற்றது. (தொடரும்)

## சிவன் வேம்புத் தைலம்

### ஆயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்றது

செம்பேசம், கருமேகப் பத்தக்கன், குஷ்டம், குறைநோய், அரிப்பு, தடிப்பு, கிரந்தி கரப்பான் புண்களும்; விஷசடிசன் மேக வூறல், சக்கூல் பத்தக்கன், சொறி சிரங்குகள்; கைகால் வலி, குடைச்சல், பிடிப்பு முதலிய சூலை ரோகங்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம் விகடப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய்க் குணமாகின்றன. ஊறல், பத்த, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம். 12 நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டி வரை தபால் செலவு சதம் 75.

அரிப்பு, தடிப்பு, சுகம்

**I**

கிரந்தி, அரிப்பு, தடிப்பு, உடம்பெல்லாம் இருந்த ஒரு பெண்ணுக்கு அநேக வைத்தியம் பார்த்தும் குணமில்லாமல் தங்கள் சிவன் வேம்புத் தைலம் சாப்பிட்டு பத்து நாளில் பூர்த்தியாய் மாறிவிட்டது.

ந. சி. கருப்பையா,
ஹெட் கங்காணி,
மொறி எஸ்டேட் கடை,
போகவந்தலாவா.

**II**

என் மனைவிக்கு முகர், கை, கால், உடம்பெல்லாம் இருந்த ஊறல், அரிப்புக்குக் கொழும்பு ஆஸ்பத்திரி ஒவ்வொன்றிலும் 2 மாதம், 3 மாதம் மருந்து சாப்பிட்டும் குணமில்லை; தங்கள் அரைமண்டல மருந்தால் பூரண சௌக்கியம்,

N. M. A. சங்கக்கோனர் K. P.,
12/12, கோச்சியாவத்தை,
கொழும்பு.

**தண்டபாணி வைத்தியசாலை, பழனி.**
(Q 4. 1-4-37 to 30-6-37) (தி) Palni (S. India)



## கேரள சந்தன சோப்

அழகான
மாதர்களுக்கேற்றது,
சருமத்திற்கு
அழகையும்
ஆரோக்கியத்தையும்
அளிக்கவல்லது





எல்லா
இடங்களிலும்
கிடைக்கும்

ஏஜன்ட்ஸ்:—

**தேவார் அன்கோ,**
57 மெயின் ஸ்ட்ரீட்,
கொழும்பு.

யாழ்ப்பாணத்தில் இது பெறக்கூடிய இடங்கள்
N. M. S. சுல்தான் மோகிதீன் பிரதர்ஸ், பெரியகடை, யாழ்ப்பாணம்
மெடிக்கல்ஹால், பெரியகடை யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்அப்போதிக்கரிஸ்கம்பனிமெயின்ஸ்ட்ரீட்,யாழ்ப்பாணம்
(Mis. 156. 1-5-37 தி.






Y 44 31-12-37



## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தினதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகு மதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸிலி பின்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவரி, நீர்முள்ளி விதை நாகப்பூ, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருபல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா 5. தபாற்செலவு பிரத்தியேகம்

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாரொச்சியப் பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
**க. ஆறுமுகம்பிள்ளை.**
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
வீட்டு இலக்கம் 33
பழைய வாடி ரோட்டு
கோட்டமுனை
மட்டக்களப்பு, சிலோன்.
Y. 46. 1-1-37 to 31-12-37)



## மாணுக்கர்க்கு ஆவசியகம் வேண்டிய நூல்கள்

1. கநிஷ்டபாடசாலை விடுகைத் தராதரப் பத்திரவகுப்பு (J. S. C) இலக்கியக் குறிப்பு, விலை சதம் 80.
2. சிரேஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (S. S. C.) இலக்கியக் குறிப்பு, விலை சதம் 75

இவை வண்ணார்பண்ணை நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர், 'வித்துவான்' ஸ்ரீ ந. சுப்பையபிள்ளை அவர்கள் எழுதிய பதவுரை, கருத்துரை, இலக்கணக் குறிப்பு முதலியவற்றை அடக்கியுள்ளன.

1937ம் ஆண்டில் நிகழவிருக்கும் மேற்படி பரீட்சைகளின் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன.

3. செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகளுக்கு உபயோகமானது; அரும்பத விளக்கமும், செய்யுட்களுக்கு உரையும் நன்கு எழுதப்பட்டுள்ளன. விலை சதம் 75.

4. இரண்டாந்தரக் கணிதம்

வித்தியாபகுதியாரின் புதிய நிபந்தனைகளுக்கிணங்க, கணிதாசிரியர் மிஸ்டர் V. E. சரவணமுத்து அவர்கள் இயற்றியது. 160 பக்கங்கள் வரையிற் கொண்டது பல சித்திரப் படங்களுடன் பெரிய அட்சரத்தில் தெளிவுற அச்சிடப்பெற்றது. இத்தமுறையாக எழுதப்பட்ட புத்தகம் முன் வெளிவந்ததில்லை. விலை சதம் 35

ஏனைய வகுப்புகட்குரிய கணிதங்கள் அச்சிலிருக்கின்றன.

5. கோபால் புதிய தமிழ்வாசகம் ஆறும் புத்தகம்
விலை சதம் 44. (அணு 7)
6. கோபால் புதிய தமிழ்வாசகம் ஏழாம் புத்தகம்
விலை சதம் 50 (அணு 8)

இவ்வாசகங்களிரண்டும் இலங்கை வித்தியாசாலைகளுக்கு ஏற்ற முறையில் சித்திரப்படங்களுடன் அழகுற அச்சிடப்பட்டுள்ளன.

7. மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்

ஸ்ரீ. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதியது; திருவாசகத் திரட்டுடன் விலை சதம் 50.

**சண்முகநாதன் புத்தகசாலை.**
Mis 12. 13-4-36. தி வண்ணார்பண்ணை.



## N, வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

Telephone No. 30.

(Y 47 1-3-37—28-2-38) தி



## விப்ரோ - அசோகா

### மிகச்சிறந்த கருப்பை டானிக்



இளம் மாதருக்குச் சகசமாக ஏற்படும் மாதவிடாய் சம்பந்தமான ஒழுங்கீனங்கள், கருப்பையில் இரத்த சஞ்சயம், இரத்தவேற்றம், அகாலப்பிரசவப்பயம், கருப்பை மிகவும் வீங்கியிருத்தல், முதலிய இன்னோரன்ன பல ஒழுங்கீனங்களுக்கு விலைமதிப்பற்ற மருந்து.

பெங்கால் கெமிக்கல், கல்கத்தா.

சிலோன் ஏஜெண்டுகள்:-

**தேவர் அன் கோ,**
57, மெயின் ஸ்ட்ரீட், கொழும்பு.


அன்பு மறனு முடைத்
தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனுமது

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Monday, May 24th 1937.